
𑌵𑌿𑌵𑌿𑌧 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 विविध विद्या



# விவித வித்யா

காலாண்டிதழ் **VIVIDHA VIDYA**

சித்ரபாநு, ஐப்பசி - மார்கழி October - December 2002

கௌரவ ஆசிரியர்:
சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,
பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா

**இன்று புதிதாய்ப் பிறந்தோம்.**

பழைமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.
வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.
முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

2

20/=

**ஆன்மீகம் அறிவியல் கலை இலக்கியம் மொழியியல்**

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

-திருஞான சம்பந்தர் தேவாரம்.

# இவர்கள் வாழ்த்துகிறார்கள்

பிரம்மஸ்ரீ ப.மனோகர சிவாச்சாரியார்
தலைவர்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

சர்வானந்தமய பீடத்தின் காலாண்டுச் சஞ்சிகையான "விவிதவித்யா"வின் வரவு கண்டு உள்ளம் பூரிக்கின்றோம். சைவத்தமிழ் மக்களின் வாழ்க்கை அறிவியலும் ஆன்மீகமும் இணைந்ததாக பழைமையில் புதுமை வளர்ந்ததாக இருக்கவேண்டும் என்ற நோக்கம் வரவேற்கத்தக்கது.

சம்ஸ்கிருதக்கல்வியின் அவசியம் மறக்கப்பட்டுவரும் இக்காலத்தில் இத்தகைய ஒரு சஞ்சிகைமூலம் சம்ஸ்கிருத மொழியின் மேன்மை பற்றியும் அம்மொழியிலுள்ள சிறப்புக்கள் பற்றியும் இன்றைய தலைமுறையினர்க்கு எடுத்துச்சொல்ல முன்வருகின்ற கௌரவ ஆசிரியர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா மற்றும் நிர்வாக ஆசிரியர் கோப்பாய் சிவம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். "விவிதவித்யா" மேலும் மேலும் வளர்ந்து நிலைத்திட வாழ்த்துகிறேன்.

பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா
சமாதான நீதவான், பிரதம குரு,
கப்பித்தாவத்தைப் பிள்ளையார் கோவில்,

"விவிதவித்யா" கிடைக்கப்பெற்றேன். ஆன்மீகத் தொண்டில் இது ஒரு முதல் படி என்றுதான் கூறவேண்டும். இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக விளங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**கல்வி நிறுவனங்களும் சமய ஸ்தாபனங்களும் தேவஸ்தானங்களும் சிவாச்சாரியார்களும் இச்சஞ்சிகைக்குப் பேராதரவு தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

மலர் 1

எழுந்திரு! விழித்திரு!
கோரியகருமம் நிறைவேறும்வரை
உழைத்திரு!

இதழ் 2



முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம், இலங்கை.

## எங்களுடன் ..................

உங்கள் பெயர் வெளிவரவேண்டும் என்பதற்காக முகஸ்துதிகள் எழுதாமல் 'விவித வித்யா' பற்றிய உங்கள் உள்ளக்(உண்மைக்) கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுங்கள்.

..............*நீங்கள்.*

## உங்களுடன்..........

"விவிதவித்யா" முதலிதழ் எதிர்பார்த்ததைவிட மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆனால், உரிய முறையில் அன்பு நெஞ்சங்களின் கைகளைச் சென்றடையவில்லை என்பதையும் அறிகிறோம்.

தகுந்த பொருளாதார வளத்துடனும் நிர்வாக பலத்துடனும் அறிவுத் தரத்துடனும் "விவிதவித்யா"வைத் தொடர்ந்து வெளிவரச் செய்வதற்கு அறிஞர்கள் பலர் ஆலோசனைகள் வழங்கியதுடன் ஆதரவுக் கரமும் நீட்டிவருகிறார்கள்.

நீங்கள் "விவிதவித்யா"வைத் தேடி வரக்கூடியதாக "விவிதவித்யா" உங்களைத் தேடிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

...........**நாங்கள்.**

मधु मनिष्ये मधु जनिष्ये मधु वक्ष्यामि मधु वदिष्यामि मधुमती देवेभ्यो वाचमुद्यासं शुश्रूषेण्यां मनुष्येभ्यः। तं मा देवा अवन्तु शोभायै पितरोऽनुमदन्तु॥

I will contemplate only sweet things and produce only sweet things; I will bear only sweet things to others and I will talk only sweet words; may I speak forth words which are sweet to the gods and which men love to hear; may the gods protect me for imparting the grace of speach and may the ancestors also congratulate me.

- Krishna Yajurveda III. 3. 2.2.

இனிய எண்ணங்களையே நான் நினைப்பேன். இனியவற்றையே நான் உருவாக்குவேன். இனியவற்றையே பிறருக்கும் வழங்குவேன். இனிய சொற்களையே பேசுவேன். தேவர்களுக்கு இனிமை பயப்பனவும் மனிதர்கள் கேட்க விரும்புகின்றதுமான சொற்களையே நான் பேசுவேன். தேவர்கள் என்னைக் காப்பார்களாக. அழகிய பேச்சை வழங்கப் பிதிரர்கள் வாழ்த்துவார்களாக.

# சிவ ஸ்துதி

𑌹𑌾𑌲𑌾𑌸𑍍𑌯 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯
𑌹𑌾𑌲𑌾𑌹𑌲𑌾𑌲𑌂𑌕𑍃𑌤 𑌕𑌂𑌧𑌰𑌾𑌯।
𑌮𑍀𑌨𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌃 𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯
𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰 𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌯॥

ஹாலாஸ்ய நாதாய மஹேஸ்வராய
ஹாலாஹலாலங்கிருத கந்தராய
மீனெக்ஷணாயா: பதயே சிவாய
நமோநம: ஸுந்தர தாண்டவாய

**ஆலவாயென்னும் மதுரா நாதருக்கு, மஹெஸ்வருக்கு, ஆலகாலத்தால் அலங்கரிக்கப்பட்ட நீலகண்டருக்கு மீனாட்சியம்மையின் பதியுக்கு, சுந்தர தாண்டவமாடும் சோமசுந்தரப் பெருமானுக்கு வணக்கங்கள்.**

𑌕𑍃𑌪𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌸𑍁𑌮𑍁𑌖𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂
𑌜𑌟𑌾𑌧𑌰𑌂 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑍍।
𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑍂𑌪𑌂
𑌚𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑍇𑌶𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌭𑌾𑌵𑌯𑌾𑌮𑌿॥

க்ருபாஸமுத்ரம் ஸுமுகம் த்ரிநேத்ரம்
ஜடாதரம் பார்வதீ வாமபாகம்
ஸதாசிவம் ருத்ரம் அநந்தரூபம்
சிதம்பரேசம் ஹ்ருதி பாவயாமி

**அருட்கடலாயிருப்பவரை, இன்முகமுடையவரை, முக்கண்ணரை, சடை தரித்தவரை, பார்வதியை இடப்பாகம் கொண்டவரை, சதாசிவரை, உருத்திரரை, முடிவிலா வடிவங்களுடையவரை, சிற்சபேசப் பெருமானை இதயத்தில் தியானிக்கிறேன்.**

திருத்தம்: சென்ற இதழில் வேதபாத ஸ்துதியில் "ஸ்ரியம் வாஸய மே குலே" என்பதன் பொருளை "திருமகளை (செல்வத்தை) என் இல்லத்தில் வசிக்கச் செய்வாயாக" என்று திருத்திக்கொள்க.

**நலம்பெறப் பிரார்த்திப்பேரம்.**

யாழ்ப்பாணத்து நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம் சிவஸ்ரீ சாம்ப சதாசிவக் குருக்களின் மூத்த புதல்வரும் அநேக அரிய சம்ஸ்கிருத நூல்களைக் கணனி மூலம் எமக்கு அளித்து வருபவரும் ஜெர்மனி சாயிநாதம் வெளியீட்டக உரிமையாளரும் ஆகிய பிரம்மஸ்ரீ சா. பாலச்சந்திர சர்மா அவர்கள் விபத்தொன்றில் சிக்கியமையால் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் மிக விரைவில் ஆரோக்கியம் அடைந்து இன்னும் பல நூல்களை எமக்கு வழங்கவேண்டுமென அம்பிகையைப் பிரார்த்திக்கிறோம்.

- ஆசிரியர்.

பிரபஞ்ச விஞ்ஞானம்

# ஜோதிஷ விஞ்ஞானம் பற்றி அறிந்துகொள்வோம்

ஜோதிஷம் என்றால் என்ன என்பது பற்றிய ஓர் ஆரம்ப விளக்கத்தை முதல் இதழில் பார்த்தோம். ஜோதிஷக்கலையில் பஞ்சாங்கம் முக்கிய இடம் பெறுகிறது. பஞ்சாங்கம் என்பது வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவாகும். இவ் ஐந்தையும் அடிப்படையாகக்கொண்டே இக்கலை கட்டி எழுப்பப்பட்டது.

**வாரம்** – ஞாயிறு முதல் சனிவரை ஏழு. இவை ராகு, கேது தவிர்ந்த ஏனைய ஏழு கிரகங்களின் பெயரால் அமைவதைக் கவனிக்கலாம். ராகு, கேதுவுக்கு ஏன் கிழமைகள் இல்லை என்பது கேள்வி. அவை ஏனைய கிரகங்கள் போலல்லாமல் நிழற்கிரகங்களாக இருக்கின்றன. அதனால் அவை சாயாக் கிரகங்கள் எனப்படுகின்றன. அதுபற்றிய விளக்கத்தைப் பின்னர் ஒருமுறை பார்ப்போம்.

**திதி** – அமாவாசை முதல் பௌர்ணமி வரையும் மறுபடி பௌர்ணமி முதல் அமாவாசை வரையும் உள்ள நாள்களின் வரிசையே திதி ஆகும். முதலாவது நாள் பிரதமை. இரண்டாவது நாள் துவிதீயை. இவ்வாறு வளர்பிறைத்திதி பதினைந்து. தேய்பிறைத்திதி பதினைந்து. ஆக இரு பட்சங்கள் ஒரு மாதத்தில் அமைகின்றன.

**நட்சத்திரம்** – அஸ்வினி முதல் ரேவதி வரை இருபத்தேழு. வானத்தில் இவை சுடர்விடுகின்றன. இவ்விருபத்தேழு நட்சத்திரங்களையும் பன்னிரு ராசிகளுக்குள் அடக்கிவிடுகிறார்கள். இவற்றைமட்டுமல்லாமல் வானத்தில் காணப்படும் ஒன்பது கிரகங்களையும் இவ் இராசிகளுக்குள் பகுத்துக் காட்டும் ஒருதளப் படமே இராசிச் சக்கரம் ஆகும்.

**யோகங்கள்** – விஷ்கம்பம் முதல் வைதிருதி வரை 27 யோகங்கள். அமிர்தாதி யோகங்கள் இவற்றின் வேறானவை. அவை அமிர்தம், சித்தம், அமிர்த சித்தம், சித்தாமிர்தம், மரணம் முதலியன.

**கரணங்கள்** – பவம் முதல் கிம்ஸ்துக்னம் வரை பதினொரு கரணங்கள் உள்ளன.

யோகங்கள், கரணங்கள் பற்றி இன்னொரு இதழில் விரிவாகப் பார்ப்போம்.

**அடுத்த இதழில்** – இராசிச் சக்கரம், நட்சத்திரங்கள், கிரகங்கள் இவற்றுக்கிடையேயான தொடர்புகளை வானியல்(Astronomy) சோதிடம்(Astrology) ஆகிய இருவகை அறிவியல்சார்பாகவும் விளங்கிக்கொள்ள முயல்வோம்.

# செல்வத்துட் செல்வம்

(சென்ற இதழ்த்தொடர்ச்சி)

வள்ளுவனார், பொருட்செல்வம் பூரியரிடத்தும் இருப்பதனால் அருட்செல்வமே செல்வங்களுள் எல்லாம் மேலான செல்வம் என்பர். மானிட வாழ்க்கையில் இலௌகீக வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டுவனவற்றையெல்லாம் நாம் செல்வங்கள் என்று எடுத்து ஏத்துகிறோம். கல்விச் செல்வம், பொருட்செல்வம், மக்கட்செல்வம் என்று இவற்றையெல்லாம் செல்வங்களாகப் போற்றுகிறோம். ஒரோவழி நமக்கு அவை மகிழ்ச்சியையும் தருவதால் அவைகளை நாம் செல்வங்களாகப் போற்றுகிறோம். ஆனால் அவை நிலைத்திருப்பதில்லை. நிலைத்திருப்பினும் ஒரோவழி நமக்குப் பயன்படுவதில்லை.

அழகிய மனைவியைச் செல்வமாகக் கொள்ளும்போது அழகற்றவிடத்துச் செல்வம் சீரழிந்துவிடுகிறது. வறுமை வந்துற்றபோது செல்வத்தைப்பற்றிப் பேசுவதால் பயனில்லை. இன்னோரன்னவற்றை நாம் ஆழமாக உற்றுநோக்கும்போது செல்வமோ செல்வத்தால் கிடைக்கும் இன்பமோ நிலையானது அல்ல. அதனால்தான் இன்பங்களைத் தரவல்ல எல்லாச் செல்வங்களையும்விட மேலான செல்வம் செல்வத்தட் செல்வம் திருமுறைச் செல்வம் என்று போற்றுகிறோம்.


– பிரம்மஸ்ரீ ச. வரதராஜேஸ்வர சர்மா
மயிலணி, சுன்னாகம்.


வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்து அழுத ஞானசம்பந்தருடைய மெய்வாக்கும் அவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. "இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே" "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" "சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை கோலத்தாற் பாடவல்லார் நல்லாரே என்றெல்லாம் முத்தமிழ் விரகர் இத்தலத்தோருக்கு வித்தகத் தமிழால் எடுத்து விளம்புவார்.

திருமுறைச் செல்வத்தை வாய் உள்ளவர்களெல்லாம் வாழ்த்தலாம். செவி உள்ளவர்கள் எல்லாம் கேட்கலாம். மனம் உள்ளவர்கள் எல்லாம்உள் மகிழலாம். மீண்டும் மீண்டும் திருமுறைகளைப் பாராயணம் பண்ணப் பண்ணக் காதாரக் கேட்கக் கேட்க, மனதார நினைக்க நினைக்க ஊருணி நீர்போல திருவருள்பெருக்கு ஊற்றெடுக்கும். அதன்பேறாக நலம் விளையும், தீமை குன்றும், செல்வம் பெருகும். வானம் வற்றாது வழங்கும். வயல் விளைச்சல் தப்பாது. களவு கன்னக்கோல் கரக்கும். நாடு நலம் பெறும். வீடு பீடு

பெருக்கும். அல்லல் அகலும். தொல்லை தூரப் போகும். இல்லம் இன்புற்று ஓங்கும்.

இவ்வாறான அடையமுடியாத அனைத்துப் பேற்றையும் அள்ளிச் சொரியும் ஆற்றல் திருமுறைகளை முறையாக ஓதுவதால் ஏற்படும் இது முக்காலும் உண்மை.

வயதிற் குறைந்த குழந்தை முதல் வயோதிபர் வரை எவரும் திருமுறைகளை ஓதத் துணியலாம். ஏனைய செல்வங்கள் உருவாக்கும் இன்பங்கள் யாவும் துன்பத்தில் முடிவுறும். திருமுறை ஓதுவதால் இன்பம். கேட்பதால் இன்பம். வீட்டின்பம் தருவதால் இன்பம். நோய்வாய்ப்பட்டிருப்பினும் உயிர் பிரியும் போதிலும் உயிர் பிரிந்த பின்னரும் ஓதுவதாலும் இன்பம்! இன்பம்!! இன்பம்!1! எந்நாளிலும் எந்த வேளையிலும் ஓதினாலும் இன்பமே அன்றித் துன்பமில்லை. இந்தத் தனியான சிறப்புத் திருமுறை ஒன்றிற்கே அன்றிப் பிறிதொரு பனுவலுக்கு இன்றாகும். அதனால் செல்வங்களுட் தலையாய செல்வம் திருமுறைச் செல்வம் ஆகும்.

கிரகப்பகை, செல்வ ஆக்கம், நோய் நீக்கம், இடர்களைதல், இயமன் தூதர் அஞ்ச, சிவலோக வாழ்வு சித்திக்க, நன்மக்கட்பேறு, பகை நீங்க, நல்லோர் தொடர்பு கைவர, ஆதி தைவிகம், ஆதி ஆத்மிகம், ஆதி பௌதிகம் எதுவாக இருந்தாலும் அவற்றில் எல்லாவற்றையும் பகை களைந்து நட்பை வளர்க்கும் திருவருள் வல்ல திருமுறைப் பாராயணம் தரவல்லது. ஓ என்று (தோடுடைய) தொடங்கி ம் என்று நிறைவு பெறுகிறது திருமுறை. ஓம் என்ற மந்திர மறைபொருளாய் நின்று ஒலிப்பது.

ஈசனுடைய இருக்கையாகவும் ஏனையவர்களுடைய தோற்றத்துக்கு வசமாகவும் உள்ளது ஓம். பிரணவப் பொருள் உணராது பிரமதேவர் மயங்கியதால் அல்லவா நான்கு முடிகளும் குலுங்கக் குமரப் பெருமான் திருக்கரத்தால் குட்டு வாங்கினார்.

# திருமுறைச் செல்வம்

### பீமரத சாந்தி

இந்துக்களின் வாழ்வில் ஏழுவிதமான சாந்திகள் செய்யப்படுகின்றன. ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியின்பின் 77ம் வயதில் 7ம் மாதத்து 7ம் இரவு பீமரதி என்று சொல்லப்படுகிறது. அப்போது செய்யும் சாந்தி பீமரத சாந்தி ஆகும். சதாபிஷேக சாந்தியை முன்கூட்டியே செய்வது போலவே இதனையும் முற்படச் செய்வதுமுண்டு.

### குலபதி

ஆயிரக்கணக்கான மாணவர்களைத் தம்மிடம் தங்கவைத்து உணவளித்துக் கல்வி கற்பித்த மகரிஷியை முற்காலத்தவர்கள் குலபதி என்று போற்றினர்.

## நாவலர் பாராட்டிய........

நாவலர் பெருமான் தமது சைவ வினாவிடை இரண்டாம் புத்தகத்தில் சைவசமயப் பிரமாண நூல்களைக் குறிப்பிடுமிடத்தில், சிவாகமங்களின் சார்பு நூல்களென்று அஷ்டப் பிரகரணம் என்னும் தொகுதியின் எட்டு நூல்களின் பெயர்களைப் பின்வரும் வரிசையில் தந்திருக்கிறார்.

1. தத்துவப் பிரகாசிகை
2. தத்துவ சங்கிரகம்
3. தத்துவத் திரய நிர்ணயம்
4. இரத்தினத் திரயம்
5. போக காரிகை
6. நாத காரிகை
7. மோக்ஷ காரிகை
8. பரமோக்ஷ நிராச காரிகை

நாவலர் பெருமான் நூல்களின் பெயர்களைத்தவிர, நூலாசிரியர்களின் பெயர்களையோ வியாக்கியானங்களை எழுதியோரின் பெயர்களையோ தரவில்லை. இவ்விபரங்கள் விரிவஞ்சி விடப்பட்டிருக்கலாம். அல்லது விபரங்களைப் பெறமுடியாமலும் இருந்திருக்கலாம். ஏனெனில் நாவலர் காலத்திற்குப் பல ஆண்டுகளின்பின்பே, 1925ம் ஆண்டிலும் 1927ம் ஆண்டிலும் இரு நூல்கள் முதன்முதல் அச்சேறி வெளிவந்தன. அதற்குமுன்பு ஏட்டுப் பிரதிகளைப் பார்த்தே நாவலரவர்கள் நூல்களின் பெயர்களைத் தந்திருப்பார்.

இவ் எட்டு நூல்களில் ஐந்து நூல்களை ஓர் ஆசிரியரும் ஏனைய மூன்று நூல்களையும் மூன்று ஆசிரியர்களும் ஆக்கியிருக்கிறார்கள். ஆசிரியர்களின் பெயரைக்கொண்டு நூல்களை வரிசைப்படுத்தாமல் நூல்கள் கூறும் பொருளையும் நூல்களின் பெயர்த்தொடர்பையும் கொண்டே நூல்களை வரிசைப்படுத்தியுள்ளார்களென்பது நன்கு தெரிகிறது. சைவசமய தத்துவங்களை விளக்கும் மூன்று நூல்களையும் முதலிலும் இவற்றுள் மூன்றாவதான தத்துவத்திரய நிர்ணயம், மூன்று தத்துவங்களையும் சுருக்கிக் கூறும் சிறு நூலாயிருப்பதால், அவற்றையே விரித்துக் கூறும் பெருநூலாகிய இரத்தினத் திரயத்தை நான்காவதாகவும் காரிகை என்னும் செய்யுட்பெயராலமைந்த நான்கு நூல்களையும் அவற்றின் பின்னும் வைத்து ஏடெழுதியிருக்கிறார்களென்றும் அறிய முடிகிறது. காரிகை நூல்கள் நான்கில் மோக்ஷ காரிகையும் பரமோக்ஷ நிராச காரிகையும் கண்டன நூல்களாகையால் அவை இறுதியில் வைக்கப்பட்டன போலும்.

மேலேயிருக்கும் நூல்வரிசையில் 2ம், 3ம், 5ம்,7ம்,8ம் நூல்களை ஆக்கியவர் ஸத்யஜோதி சிவாசாரியார் என்னும் பேரறிஞர். முதலாம் நூலை ஆக்கியவர் போஜதேவர் என்பவர். போஜதேவர் வேறுசில நூல்களுக்கு உரை எழுதியவர் என்று கூறப்படுகிறது. இவரது பெயரோடு பட்டர், சிவாசாரியர் என்ற சிறப்புப் பெயர்கள் இல்லாததற்குக்

அஷ்டப் பிரகரணம்

ச.ப.

காரணம் இவர் அரசகுலத்தவராயிருந்தமைதான் என்று கூறுகிறார்கள்.
நான்காவதும் பெரியதுமான இரத்தினத் திரயம(மும்மணிகள்) என்னும் நூலை ஆக்கியவர் ஸ்ரீகண்டாசார்யர் என்னும் சிவாசார்யர். பத்ததிகாரர் பதினெண்மரின் பெயர்களுள்ளும் ஸ்ரீகண்டாசார்யரின் பெயர் காணப்படுகிறது. ஆறாவது நூலான நாதகாரிகையை பட்டராமகண்டர் என்பவர் எழுதியதோடு ஏழாம் நூலான மோக்ஷ காரிகைக்கு வியாக்கியானமும் எழுதியிருக்கிறார். இவருடைய தந்தை பட்ட நாராயண கண்டர் என்பதும் இவர்களைக் காஸ்மீர தேசத்திலிருந்து தமிழ்நாட்டரசர்கள் அழைத்துவந்து பல மடங்களை நிறுவி அவற்றுக்கு இவ்வறிஞர்களைத் தலைவர்களாக நியமித்து ஆதரித்தனரென்றும் அவர்கள் அந்த மடங்களில் தங்கியிருந்து மாணவர்களுக்குக் கல்வியறிவூட்டியதோடு பல நூல்களையும் உரைகளையும் எழுதினரென்றும் இனப்பகை, மொழிப்பகையற்ற வரலாற்றாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். இச்செய்திகளையும் வேறு தகவல்களையும் சைவ இலக்கிய வரலாறு என்னும் தமிழ் நூலிலும் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு அக்கடமியின் ஆதரவில் வெளிவந்துகொண்டிருந்த ஆகம நூல்களில் ஒன்றான மதங்க பாரமேசுவரம் என்னும் நூலின் வடமொழிப் பதிப்புரையிலும் அறியலாம்.

அஷ்டப் பிரகரண நூல்களை முன்கூறியவாறு வரிசைப்படுத்தியதோடு முதல் ஆறு நூல்களுக்கும் வடமொழியில் வியாக்கியானமும் எழுதியுதவியவர் பிரசித்திபெற்ற பத்ததிகாரரான அகோர சிவாசாரியராவார். இறுதியிலுள்ள இரு நூல்களுக்கும் இவர் வியாக்கியானம் எழுதாததற்குக் காரணம் இவரது வாழ்நாள் முடிவுற்றதாயிருக்கலாம். அன்றேல், அவ்விரு நூல்களுக்கும் ஸ்ரீராமகண்டர் வியாக்கியானம் எழுதுவதை அறிந்து இவர் தம் முயற்சியைக் கைவிட்டிருக்கலாம்.

அஷ்டப் பிரகரண நூல்களின் ஆசிரியர்கள் சைவசமய குரவர்களின் காலத்திற்கும் சந்தான குரவர்களின் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தவர்களென்று கூறப்படுவதால் சகலாகம பண்டிதரான அருணந்தி சிவாசாரியரும் உமாபதி சிவாசாரியரும் தங்கள் நூல்களை விரிவாக இயற்றுவதற்கு மூலாகமங்களும் உபாகமங்களும் உதவியதுபோல அஷ்டப் பிரகரணமும் உதவியிருக்குமோ என்பது ஆய்வுக்குரிய விஷயம். இப்பணியில் யார் ஈடுபடுவார்களோ?

எட்டு நூல்களில் இரத்தினத் திரயம் , மோக்ஷகாரிகை, போககாரிகை ஆகிய மூன்றும் அளவிற் பெரியன. தத்துவத்திரய நிர்ணயமும் நாதகாரிகையும் சிறியவை. ஏனைய மூன்றும் இடைப்பட்டவை.

பனையோலைச் சுவடியிலிருந்து அழிந்துபோகாமல் இவற்றை அச்சேற்றிப் பாதுகாத்த புண்ணியவாளர், பொ. முத்தையபிள்ளை என்பவர். மற்றைய பதிப்பாளர்கள்போல் அச்சேற்றுதலளவில் அமைந்துவிடாமல் மேலும் இரு பயனுள்ள பணிகளை இப்பதிப்பில் ஆற்றியுள்ளார். ஒன்று, வடமொழி தெரியாதவர்களும் படித்துப் பயனடையத்தக்கதாய் மு. சுப்பிரமணிய

சாஸ்திரிகள், நா. கிருஷ்ண சாஸ்திரிகள் என்னும் இரு அறிஞர்களைக்கொண்டு மொழிபெயர்ப்புச் செய்வித்து வெளியிட்டமை. மற்றையது, கிரந்த எழுத்தில் மட்டும் இவை வெளியிடப்பட்டால் வடமொழி வல்லுநர்களும் தத்துவ நிபுணர்களும் படித்தறிய மாட்டார்களென்று கருதி மூலத்தைத் தேவநாகரியிலும் முன்யோசனையோடு வெளியிட்டமையாகும். இப்பெரியார் தேவிகாலோத்தரம் என்னும் உபாகமத்தின் தமிழ்ச் செய்யுள் நூலையும் உரையுடன் வெளியிட்டதோடு வேறு பல சமயப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தவர். இவரது வேண்டுகோளை ஏற்று இவற்றை வெளியிட்ட நிறுவனம் தேவகோட்டை சிவாகம சங்கமாகும். அரும் பணிகளாற்றிய இச்சங்கம் இன்று இல்லாமற் போனமை காலம் செய்த கொடுமை. காலஞ்சென்ற முத்தைய பிள்ளையின் பணிகளைச் சைவ உலகம் நன்றியுடன் நினைவுகூரவேண்டும்.

# வாழ்த்துகின்றோம்



***இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்கோவில் பிரம்மஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள் – ஸ்ரீமதி ரஞ்சிதமணி அம்மா தம்பதிகள் கடந்த 18–9–2002இல் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை விமர்சையாகக் கொண்டாடினார்கள்.***

***அத்தினத்திலே விக்நேஸ்வர யந்திரபூஜை (கிரந்தம்), சிவாகமங்களில் திருக்கோவில் (பேராசிரியர், கலாநிதி, பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் எழுதியது) ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.***

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம் அமரர் தியாகராஜக்குருக்களின் புதல்வரும் பல சம்ஸ்கிருத நூல்களின் ஆசிரியர் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மாவின் சகோதரரும் ஆகிய சிவஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகள் அண்மையில் ஏழாலையிலுள்ள தமது இல்லத்தில் ஷஷ்டியப்த பூர்த்திவிழாவை அமைதியாகக் கொண்டாடினர்.

***தம்பதிகளை வாழ்த்தி மகிழ்கிறோம்.***

**குளகம்**

இதிகாச புராண காவியங்களில் பல செய்யுள்கள் தொடர்ந்து ஒரே வாக்கியமாக அமைந்திருந்தால் அதனைக் குளகம் என்று கூறுவது இலக்கண மரபு. குளகம் பல பாட்டொரு வினை கொள்ளும் என்பது தண்டியலங்கார விதி.

# பரிசுப் போட்டிகள்

'விவிதவித்யா'வின் சார்பில் சர்வானந்தமய பீடம் நடத்தும் பல்வேறு பரிசுப்போட்டிகள் பற்றித் தனியான பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரம் பாடசாலைகள், தேவ ஸ்தானங்கள், மற்றும் சமய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் இளைஞர்கள் உடனடியாகத் தமது விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். மேலதிக விபரங்களுக்கு 'விவிதவித்யா' முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# ஐயம் தெளி அரங்கு

? தமிழ்மொழி இலக்கண, இலக்கியங்கள்

? சம்ஸ்கிருதமொழி இலக்கண, இலக்கியங்கள்

? இந்துசமயம் இந்து நாகரிகம்

? வேத சிவாகம் கிரியாமுறைகள்

? சம்பிரதாயங்கள், சடங்குகள்


? விரதங்கள், வழிபாடுகள்

? சோதிடம்


இத்துறைகள் சார்ந்த, பலருக்கும் பயன் தரத்தக்க உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவ்வத்துறைசார்ந்த நிபுணர்களிடம் அவை சமர்ப்பிக்கப்பட்டு உரியமுறையில் பதில்விளக்கம் 'விவிதவித்யா' வில் பிரசுரிக்கப்படும்.

# சதாபிஷேக விழாவும் நூல்வெளியீடும்

'விவித வித்யா' சஞ்சிகையின் கௌரவ ஆசிரியரும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் ஒருவருமான பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்களுக்கு நடைபெற்ற சதாபிஷேகவிழாவிலும் அதனைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு காலங்களில் நடந்த பாராட்டுவிழாக்களிலும் எடுக்கப்பட்ட சில படங்களை இங்கு காண்கிறீர்கள்.












08-04-2001இல் மருதானை, கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிலே பண்டிதர் ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்களால் புதியமுறையில் எழுதப்பட்ட நாகரி-கிரந்த-தமிழ் எழுத்துப் பயிற்சி நூலான **"அக்ஷர போதினி"** என்ற நூலும் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சர்மா அவர்களின் பன்முகப் பணிகள் பற்றி விமர்சித்து எழுதிய ஆய்வுக்கட்டுரையான **"மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம்"** என்ற நூலும் வெளியிடப்பட்டன.

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தினால் 15-04-2001இல் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்களுக்கும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்களுக்கும் பாராட்டுபசாரமும் பட்டமளிப்பும் நடத்தப்பட்டது.

பண்டிதர் சர்மா அவர்களுக்கு 'வித்துவ சிரோமணி' என்ற விருதும் சிவஸ்ரீ குருக்கள் அவர்களுக்கு 'சிவாகம வித்துவான்' என்ற விருதும் வழங்கப்பட்டதுடன் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

திருகோணமலை காளிகோவில் மண்டபத்தில் 29-04-2001 இலும் பின்னர் கோப்பாய் கந்தசுவாமிகோவில் மண்டபத்தில் 13-05-2001 இலும் பண்டிதர் அவர்களின் நுல்களுக்கான அறிமுக விழாக்கள் விமர்சையாக நடந்தன.



சர்வதேச இந்துக்குருமார்சங்கத்தின் சார்பில் நல்லை ஆதீன மண்டபத்திலும் இலங்கை இந்துப் பேரவை சார்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெற்ற பெருவிழாக்களிலே விழா நாயகர் நேரில் கலந்துகொள்ள முடியாமையினால் அவரது மகன் கோப்பாய் சிவம் கலந்துகொண்டு கௌரவத்தை ஏற்றார். இலங்கை இந்துப் பேரவை "சிவகலா பூஷணம்" என்ற விருதையும் இந்துக்குருமார் ஒன்றியம் "வித்தியா கலாபமணி" என்ற விருதையும் வழங்கினர்.

# பாராட்டும் பட்டமளிப்பும்

## பிழை பரப்பல்....

அன்னைமொழியை அரியணையில் அமர்த்தவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். மூத்த மொழி ஆயினும் மூவாத கன்னித்தமிழ் என்று சந்தர்ப்பம் வாய்க்கும்போது பெருமை பேசிக்கொள்கிறோம். ஆயினும் எம்மில் எத்தனை பேர் எமது மொழியை நன்கு கற்றுப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் முயலுகிறோம்? இலக்கிய இலக்கணங்களைப் படிக்க இயலவில்லையென்றாலும் தமிழறிஞர்கள் எழுதிய உரைநடை நூல்களையாவது வாசித்து எமது எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ள முயலுகிறோமா?

இப்போது தமிழ் மொழியில் பிழை மலிந்துகொண்டிருக்கிறதே என்று பலரும் குறை கூறுகிறார்கள்.கவலை கொள்கிறார்கள். ஆலயங்களும் பாடசாலைகளும் செய்தி ஊடகங்களும் நல்ல தமிழைப் பரப்பவேண்டியவை. அப்படியிருந்தும் அவை பிழைபரப்பும் நிலையங்களாய் மாறிவருவது கவலையளிக்கிறது.

# தாய்மொழியில் தவறு செய்யலாமா?

ஆலயங்களின் விளம்பரப் பலகைகளிலும் கும்பாபிஷேக விஞ்ஞாபனங்களிலும் பிழைகள் இருந்தால் பொதுமக்கள் அப்பிழைகளைச் சரியென்றே எண்ணித் தாமும் அப்படி எழுதுகிறார்கள். இப்படித்தான் 'விஷேடம்' பிறந்து வளர்ந்தது. பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. இருப்பவர்களில் பலர் தகுதி பெறாதவர்கள். பயிற்சிபெற்ற ஆசிரியர்களும் பட்டதாரிகளும்கூட தாம் பயின்ற பாடங்களை விட்டு வேறு பாடங்களைப் போதிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றனர். இவர்கள் பிழை நிறைந்த பாடப் புத்தகங்களின் துணையோடு மேலும் பிழைகளைப் பரப்புகிறார்கள். பாடநூல்களும் பிழை பரப்புவதில் முன்னிற்கின்றன.

**பண்டிதர் ச. பஞ்சாக்ஷர சர்மா**

மேலே குறிப்பிட்டவர்களும் ஊடகவியலாளரும் பரப்பும் பிழைகளை அட்டவணை இட்டபோது அவற்றின் தொகை நூற்றுக்கும் மேலே போனது! அவற்றுட் சில 'விவிதவித்யா' முதலிதழில் 'விஷேட'த்துக்கு எழுதியதுபோல காரணங்காட்டி விளக்கவேண்டியிருப்பதால் அவற்றையும் ஊடகவியலாளர்கள் பரப்பும் பிழைகளையும் அடுத்த இதழுக்கு

**தமிழ்மொழியில் நாம் செய்கின்ற இத்தகைய பல சொற்பிழைகளை சர்மா அவர்கள் தொடர்ந்து ஆராயவுள்ளார்.**

வைத்துக்கொண்டு ஏனையவற்றைக் கீழே தருகிறோம். எல்லாப் பிழைகளும் எல்லாரும் பார்த்தறிய வேண்டியனவே. ஆயினும் **அ** பிரிவிலுள்ளவை ஆலயத்தோடு தொடர்புடையோருக்கும் **ஆ** பிரிவிலுள்ளவை கல்விச்சாலைத் தொடர்புடையோருக்கும் உரியன. இவற்றுட் சில பிரதேச வழக்கு. சில இடங்களில் மாத்திரம் வழங்குவன.

## அ

| தவறானவை | சரியானவை |
|---|---|
| வினாயகர் | விநாயகர் |
| சன்னதி | சந்நிதி |
| சன்னிதானம் | சந்நிதானம் |
| பிரகாரம் | பிராகாரம் |
| கற்பூரம் | கர்ப்பூரம் |
| வீபூதி | விபூதி |
| சந்தணம் | சந்தனம் |
| புஸ்பம் | புஷ்பம் |
| தீத்தம் | தீர்த்தம் |
| அரிச்சனை | அர்ச்சனை |
| அருச்சனை | அர்ச்சனை |
| பவுத்திரம் | பவித்திரம் |
| தெட்சணை | தட்சிணை |
| தெற்பை | தர்ப்பை |
| தெற்பணம் | தர்ப்பணம் |
| விதரம் | விரதம் |
| புண்ணியாதானம் | புண்ணியாகவாசனம் (புண்ணியாகம்) |
| நெய்வேத்தியம் | நைவேத்தியம் |
| கெற்பக்கிருகம் | கர்ப்பக்கிருகம் |
| சம்புரோஷணம் | சம்புரோக்ஷணம் |
| பிரதிஸ்டை | பிரதிஷ்டை |
| கிரகப்பிரவேசம் | கிருகப்பிரவேசம் |
| கிரகயஜ்ஞும் | கிருகயஜ்ஞும் |

(கிருகம்-வீடு, கிரகம்- நவக்கிரகம்)

| தவறானவை | சரியானவை |
|---|---|
| நட்சேத்திரம் | நடசத்திரம் (நக்ஷத்திரம்) |
| உத்திரம் | உத்தரம் |
| உத்திராடம் | உத்தராடம் |
| உத்திரட்டாதி | உத்தரட்டாதி |
| அஷ்டோத்திரம் | அஷ்டோத்தரசதம் |
| விருட்சிகம் | விருச்சிகம் |
| கற்கடகம் | கர்க்கடகம் |
| களஸ்திரம் | களத்திரம் |
| வியாகப்பொங்கல் | விசாகப்பொங்கல் |
| சிரார்த்தம்--(சிர-அர்த்தம் பாதித் தலை) | சிராத்தம்--சிரத்தையோடு செய்யப்படுவது) |
| சிரோன்மணி | சிரோமணி |
| மகுடாசூரன் | மகிடாசுரன் மகிஷ அசுரன் |
| கெயமுகாசூரன் | கஜமுகாசுரன் (கஜமுக அசுரன்) |
| நரகாசூரன் | நரகாசுரன் ( நரக அசுரன்) |
| தண்டேசுரர் | சண்டேசுவரர் சண்டேசர் |
| ஆசூசம் | ஆசௌசம் |
| அந்திரட்டி | அந்தியேஷ் |

## ஆ

| தவறானவை | சரியானவை |
|---|---|
| ஆண்மாக்கள் | ஆன்மாக்கள் |
| பிரளையாகலர் | பிரளயாகலர் |
| விஞ்ஞானகலர் | விஞ்ஞானாகலர் (விஞ்ஞான அகலர்) |
| பிராரத்துவம் | பிராரத்தம் (பிர ஆரப்தம்) |
| பிரமச்சாரி | பிரம்மசாரி |
| பிரமச்சரியம் | பிரம்மசர்யம் |
| கிரகஸ்தம் | கிருகஸ்தம் |
| சன்னாசி | சன்னியாசி (சந்நியாசி) |
| கிரிகை | கிரியை |
| சத்தினி பாதம் | சத்தி நிபாதம் |
| ஆச்சிரமம் | ஆசிரமம் |
| சமயாச்சாரியார் | சமயாசாரியார் |
| சந்தானாச்சாரியர் | சந்தானாசாரியர் |
| சிவாச்சாரியார் | சிவாசாரியார் |

| தவறானவை | சரியானவை |
|---|---|
| திருஞானசம்மந்தர் | திருஞானசம்பந்தர் |
| சிவபாதவிருதையர் | சிவபாதவிருதயர் |
| சம்புபாதாசிரியர் | சம்புபாதாசிரயர் |
| தேவாசிரிய மண்டபம் | தேவாசிரய மண்டபம் |
| மங்கயற்கரசி | மங்கையர்க்கரசி |
| பஞ்சகோமியம் | பஞ்சகவ்வியம் |
| பிரமசூஸ்திரம் | பிரம்மசூத்திரம் |
| யசூர்வேதம் | யசுர்வேதம் |
| பிரதிட்டை போடுதல் | அங்கப்பிரதட்சணம் செய்தல் |
| ஜாதக கருமம் | ஜாதகருமம் |
| ஞாஞ்ஞவல்லியர் | யாஜ்ஞவல்கியர் |
| கேனோ உபநிஷத்து | கேனோபநிஷத்து (கேன உபநிஷத்து) |
| கடோ உபநிஷத்து | கடோபநிஷத்து (கட உபநிஷத்து) |
| ஐதரேயப்பிரமாணம் | ஐதரேயப் பிராமணம் |
| பிராணயாமம் | பிரானயாமம் |

## சுபீட்சம் ?

*சுபிட்சம்* என்ற அழகான சொல்லைத் தேவையின்றிப் பத்திரிகையாளர்கள் நீட்டிவிட்டிருக்கிறார்கள். இச்சொல்லின் எதிர்ப்பொருட் சொல் *துர்ப்பிட்சம்* என்பது. இரண்டு சொல்லிலும் *பிட்சா* என்ற சொல் அடங்கியிருக்கிறது. அதற்கு உணவு, கேட்டுப் பெறும் உணவு என்னும் பொருள்களுண்டு. உணவு கிடையாத பஞ்ச நிலைமை துர்ப்பிட்சம் என்றும் வளம் பெருகி உணவு கிடைக்கும் நிலைமை சுபிட்சம் என்றும் சொல்லப்படுகின்றது. எனவே இச்சொல் *சுபிட்சம்* என்றே எழுதப்பட வேண்டும்.

தமிழில் பிக்ஷ்(பிச்சையெடு) யாச்(இரந்து கேள்) என்னும் இரண்டு வினையடிப் பெயர்களும் இழிந்த பொருளில் வழங்கினாலும் வடமொழியில் பிக்ஷ்(கேட்டுப் பெறு) பிக்ஷு (உணவு பெற்று உண்பவன்) என்பன உயர்ந்த பொருளிலேயே வழங்குகின்றன.

**மாணவர் பகுதி**

*வடமொழி மாணவர்க்காக இப்பகுதியில் பல்துறை விஷயங்கள் தொடர்ந்து வெளிவரும். போட்டிகளும் இடம்பெறும்.*

# சொல்லறிவு–1

ஒரு பொருள் உணர்த்தப் பல சொற்கள் வழங்குவது வளர்ச்சி யடைந்த பல மொழிகளிலும் காணப் படுகின்ற ஓரியல்பு. வடமொழியில் இது மிக அதிகமாகும். நிகண்டு என்னும் நூல்வகையில் இவற்றைப் படித்துப் பாடமாக்குவது பழைய கல்விமுறையில் இருந்தது. அமரம் என்னும் சம்ஸ்கிருத நிகண்டில் சிவன் என்னும் பொருளில் ஐம்பதுக்கு மேற்பட்ட சொற்களுண்டு.

பின்வருவன தண்ணீர் என்னும் பொருளைத் தரும் சொற்கள்.


**ஜல, வாரி, அம்பு, நீர, பயஸ், உத** இச்சொற்களோடு தோன்றுவது(முளைப்பது) என்னும் பொருள் தரும் ஜ என்னும் எழுத்தைச் சேர்த்து **ஜலஜம், வாரிஜம், அம்புஜம், நீரஜம்** என்னும் சொற்கள் தாமரை என்னும் பொருளில் வழங்குகின்றன. ஜ என்பதற்குப் பதிலாக தருவது என்னும் பொருளுள்ள த (𑌦 / द ) என்பதைச் சேர்த்தால் மேகத்தைக் குறிக்கும் **ஜலத, வாரித, அம்புத, பயோத** ஆகிய சொற்கள் தோன்றும். இந்த த (𑌦 / द )வுக்குப்பதில் தர(𑌧𑌰 / धर) என்னும் சொல் சேர்க்கப்பட்டு **ஜலதரம், பயோதரம்** என்னும் சொற்கள் ஆக்கப்பட்டன. இவை நீரைத் தரிப்பது(தாங்குவது) என்ற பொருளில் மேகத்தைக் குறிப்பன. இவற்றுள் **பயோதரம்** என்பதற்கு மேகம் என்ற பொருளைவிட முலை என்ற பொருளும் உண்டு. எவ்வாறெனில் இப்பெயரின் முன் சொல்லான **பயஸ்** என்பதற்கு நீர் என்ற பொதுப் பொருளைவிட பால் என்ற சிறப்புப் பொருளுமுண்டு.

நீர் என்ற பொருளுள்ள மேற்குறித்த சொற்களோடு தி(𑌧𑌿 / धि), நிதி(𑌨𑌿𑌧𑌿 / निधि)என்னும் சொற்களைத் தனித்தனியே சேர்ப்பதால் கடல் என்னும் பொருளுள்ள **ஜலதி, வாரிதி, பயோதி, உததி** என்பனவும் **ஜலநிதி, வாராம்நிதி, பயோநிதி** என்பனவும் தோன்றி மொழியை வளம்படுத்துகின்றன. இச்சொற்களோடு தொடர்புடைய சுவைமிக்க கதையொன்றை அடுத்த இதழில் தருகிறோம்.

## சொல்லறிவு–2 எழுத்து மாறுவதால் பொருள் மாறுதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 𑌕𑌰𑌃 | कर: | கை, கிரணம் | 𑌚𑌯𑌃 | चय: | குவியல் |
| 𑌖𑌰𑌃 | खर: | கழுதை | 𑌜𑌯𑌃 | जय: | வெற்றி |

| | | |
|---|---|---|
| கண: | कण: | சிறிய காசு, குருணி |
| க3ண: | गण: | கூட்டம் |
| சலம் | चलं | அசைகின்ற |
| ச2லம் | छलं | மறைப்பு, வஞ்சனை |
| ஜலம் | जलं | தண்ணீர் |
| பலம் | पलं | ஒருநிறை, மாமிசம் |
| ப2லம் | फलं | பழம் |
| ப3லம் | बलं | வலிமை, சேனை |
| நாக: | नाक: | சுவர்க்கம் |
| நாக3: | नाग: | பாம்பு, யானை |
| நக2: | नख: | நகம் |
| நக3: | नग: | மலை,மரம் |
| க2ல: | खल: | கொடியவன் |
| க3ல: | गल: | கழுத்து |
| தலம் | तलं | சமதரைஉள்ளங்கை |
| த3லம் | दलं | இலை, சேனை |
| தநு: | तनु: | உடல் |
| த3நு: | दनु: | அசுரரின் தாய் |
| த4நு: | धनु: | வில்லு |
| த2தா | तथा | அப்படி |
| தத3ா | तदा | அப்பொழுது |




**1. கஜமுக:, சதுர்முக:, பஞ்சமுக:, ஷண்முக:, என்பன முறையே விநாயகருக்கும், பிரம்மாவுக்கும், சிவபிரானுக்கும், முருகனுக்கும் உரிய பெயர்கள் என்பதும் பெயர்க்காரணமும் பலருக்கும் தெரிந்தவையே. இவற்றுள் பஞ்சமுக: என்பதும் அதே பொருளுள்ள பஞ்சாஸ்ய: என்பதும் ஒரு மிருகத்துக்கும் பெயராய் வழங்குகிறது. இது எவ்வாறு பொருந்தும்? அம்மிருகம் யாது?**

**2. அஜமுகி என்பது கந்தபுராணத்தில் வரும் ஓர் அசுரப் பெண்ணுக்குப் பெயர். அதுபோல சதமுகி என்பது வேறிடத்தில் வரும் ஒரு பெயர். இவன் யாவன்? (இவன் பெண்ணல்ல என்ற குறிப்பையும் தந்துதவுகிறோம்)**

**3. பாயசம், பாயாசம் என்ற இரு சொற்களில் எது சரியானது? காரணம் தருக.**

**4. கோயில்களிலும் அந்தணர் வீடுகளிலும் உபயோகப்படுகின்ற சிறியதொரு பாத்திரத்திற்குப் பஞ்ச பாத்திரம் என்று பெயர். ஐந்து லோஹங்களால் ஆக்கப்பட்டபடியால் அதற்கு அப்பெயர் வந்ததென்று சிலர் ஊகம் பண்ணிக் கூறுகிறார்கள். அவர்களது ஊகம் சரியானதுதானா? இல்லையெனில் சரியான காரணம் யாது?**

# புதிர்ப் போட்டி-2

(பிழை திருத்தம்: புதிர்ப் போட்டி - 1 இல் ஏற்பட்ட சிறிய அச்சுப்பிழை வாசகர்களுக்குச் சங்கடம் தந்திருக்கக்கூடும். கே தாரபோஷண ரதா: ? என்ற வினாவின் மொழிபெயர்ப்பில் யார்மனைவி என்று இரு சொற்கள் இணைந்தது தவறு. யார் என்ற வினா அந்த வாக்கியத்தின் எழுவாய். தவக்கு வருந்துகிறோம்)

1. कस्तूरी जायते कस्मात् को हन्ति करिणां कुलम्।
किं कुर्यात् कादरो युद्धे मृगात् सिंहः पलायते।।

**கஸ்தூரீ ஜாயதே கஸ்மாத் ? கோ டிந்தி ஹரிணாம் குலம்?।**
**கிம் குர்யாத் காதரோ யுத்தே ? ம்ருகாத் ஸிம்ஹ: பலாயதே॥**

கஸ்தூரி எங்கே உண்டாகிறது? எது யானைக் கூட்டத்தைக் கொல்கிறது? பயந்தவன் யுத்தத்தில் என்ன செய்வான்? சிங்கம் மானுக்ப் பயந்தோடுகிறது. இதில் மூன்று வினாக்களும் பொருத்தமற்ற ஒரு வாக்கியமும் இருக்கின்றன. விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

2. காதல், கவறாடல், கள்ளுண்ணல், பொய்மொழிதல் – இவையெல்லாம் தீயோர் செயலென்று நீதி நூல்கள் கூறுகையில் பின்வரும் நீதிக்கோவைச் செய்யுளோ மாறாகக் கூறுகிறது. அறிஞர்களுக்குக் காலைப்பொழுது சூதாட்டத் தொடர்பிலும் நண்பகல் பெண் தொடர்பிலும் மாலைப்பொழுது திருட்டுத்தொடர்பிலும் கழிகிறது என்கிறது இந்தச் சுலோகம். ஊகம்பண்ணி இதன் உட்கருத்தைக் கண்டுபிடியுங்கள்.

प्रातर्द्यूतप्रसंगेन मध्यमे स्त्री प्रसंगतः।
सायं चोरप्रसंगेन कालो गच्छति धीमताम्।।

---

விவிதவித்யா முதலாவது இதழின் விநியோகத்தில் எற்பட்ட சில தடங்கல்கள் காரணமாக அவ்விதழ் சரியான முறையில் அனைத்து வாசகர்களையும் சென்றடையவில்லை என்பது நமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது இதழும் தாமதமாக டிசம்பர் மாதத்திலேதான் வெளிவருகிறது. மூன்றாவது இதழ் இப்போதே தயார்நிலையிலிருப்பதால் ஜனவரி மாதத்திலேலே வெிளிவந்துவிடும்.

எனவே இம்மூன்று இதழ்களிலும் இடம்பெறுகின்ற அனைத்துப்போட்டிகளுக்கும் முடிவுதிகதியாக 01 - 03 - 2002 அமைகிறது.

பரிசுத்தொகை அறிவிக்கப்படாத இப்போட்டிகளில் கலந்துகொண்டு சரியான விடை அனுப்பும் யாவருக்கும் பெறுமதியான புத்தகப் பரிசில்கள் காத்திருக்கின்றன.

# தர்ப்பணம்

மயிலணி, பிரம்மஸ்ரீ
ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

தர்ப்பணம் என்றால் த்ருப்தி செய்தல் என்று பொருள். பொதுப்பொருள் இவ்வாறாயினும் பிதிர்களை நாடி எள்ளும் ஜலமும் அளிப்பதே தர்ப்பணம் எனப் பிரசித்தமாக வழங்கப்படுகிறது. பித்ருக்கள் என்போர் நமது தந்தை, அவரது தந்தை, அவரது தந்தை என்பவர் மாத்திரமல்லர். ஆதியில் பிரம்மதேவனால் படைக்கப்பட்டோர் பித்ரு தேவர்கள் எனப்படுவர். அவர்கள் வசிப்பது பித்ருலோகம். அங்கே வசு, ருத்ரர், ஆதித்தியர் என மூன்று வகையான பித்ருக்கள் வசிக்கின்றனர்.

இறந்த நமது பிதா வஸு என்னும் பித்ருக்களுடன் சேருகிறார். நமது பிதாவின் தந்தை பிதாமஹர் எனப்படுபவர். அவர் ருத்ரர் என்னும் பித்ருக்களுடன் சேருகிறார். அவரது தந்தைக்கு ப்ரபிதாமஹர் என்று பெயர். அவர் ஆதித்யர் என்னும் பித்ருக்களுடன் சேருகிறார். இங்ஙனமே மாதாமஹர், மாதுபிதாமஹர், மாதுப்ரபிதாமஹர் ஆகியோரும் தாய்வழிப் பித்ருக்கள். இவர்களும் இவ்வொழுங்கிலேயே சேருவர். வஸு ருத்ர ஆதித்ய ஸ்வரூபாய பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹ எனக் கூறுவது இதனாலேயே.

வஸு ருத்ர ஆதித்யர்கள் உலக நன்மைக்காக பிரம்மாவால் படைக்கப்பட்டவர்கள். அஷ்ட(8) வசுக்கள், ஏகாதச(11) ருத்ரர்கள், துவாதச(12) ஆதித்யர்கள் என வேதம் கூறுகிறது. அவர்களது பெயரைக் கூறி நாம் செய்யும் தர்ப்பணம் சிராத்தம் இவைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, நமது பித்ருக்கள் எங்கிருக்கின்றனர் எப்பிறவி பெற்றிருக்கின்றனர் என்று யோசித்து அவருக்கு ஏற்ற அன்னமாக மாற்றி அளிக்கின்றனர். இதற்குப் பிரமாணம் ஈஸ்வர ஆஜ்ஞையான வேத வாக்கே. "ஊர்ஜம" என்ற மந்த்ரம் இதை ஸ்பஷ்டமாகக் கூறுகிறது. இதன் விளக்கம்:

ஓ, தீர்த்தமே, கர்மவசமாகி ஒருசமயம் மனுஷ்ய தேவ, ராக்ஷச, மரம், கொடி, சண்டாளன் முதலிய ஜன்மாவை எங்கள் பித்ருக்கள் அடைந்திருந்தால் அவர்களுக்கு உசிதமான அன்னம், அம்ருதம், நெய், பால், ரக்தம், ஸுரை(கள்) முதலிய உணவாகி பித்ரு அன்னமாக இருந்து என் பித்ருக்களைச் சந்தோஷப் படுத்தவும் என்பதாகும்.

பித்ருக்களை நாடிச் செய்யப்படும் தர்ப்பணம் பலவகைப்படும். ஒருவர் இறந்த 10 நாள்வரை செய்வது குண்ட தர்ப்பணம். ப்ரம்மயஜ்ஞத்தின் அங்கமாக நாடோறும் செய்யும் தர்ப்பணம் ஒருவகை. அமாவாசை, ஸங்க்ரமணம், கிரஹணம், ஷண்ணவதி எனும் 96 தர்ப்பணம் இவைகள் ஒருவகையான தர்ப்பணம். பெற்றோர்களது ப்ரத்யாப்திக சிராத்தத்திற்கு மறுநாள் அதிகாலையில் செய்வது பரேஹனி தர்ப்பணம்.

இங்ஙனம் செய்யப்படும் தர்ப்பணததில் ஆஸ்வலாயன ஸூத்ரம் ஆபஸ்தம்ப ஸூத்ரம், போதாயன ஸூத்ரம், த்ராஹ்யாயன ஸூத்ரம் என்ற பலவகையான ஸூத்ரகாரர்களுக்குள் பேதமுண்டு என்றாலும் முக்யமான கொள்கையிலும் அங்கமான சதாசாரத்திலும் போதமில்லை எனலாம்.

இறந்தபின் பிதிர்கள் வேறு உலகம் செல்வதால் தமக்கு வேண்டிய உணவையும் நீரையும்கூடத் தேடிக்கொள்ள முடியாது. பிறர்கையையே எதிர்பார்க்கவேண்டும். பசியாலும் தாகத்தாலும் வாடி தர்ப்பண தினங்கள் எப்போது வரும்? எப்போது எமது புத்திரர் தர்ப்பணம் செய்வர்? என ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பர். விதி தவறாமல் ஏற்ற காலத்தில் மந்த்ரங்களைக் கூறி நன்றாகச் செய்யும் தர்ப்பணமே அவர்களிடம் சேரும். முறைதவறிச் செய்தாலும் செய்யாமல் இருந்தாலும் அவர்கள் பசியோடு வாடுவர். அக்காலத்தில் கோபம் உண்டாவது இயற்கை. இயற்கையான அன்பையும் விட்டு சாபம் கொடுப்பார்கள். பித்ருக்கள் முன்கூறிய வஸு ருத்ர ஆதித்யர்களுடன் சேர்வதால் சிக்ஷிக்கவும் ரக்ஷிக்கவும் சக்தி பெறுகின்றார்கள். தர்ப்பணம் செய்வதால் வயிறு நிறைய மனங்குளிர பூரணமாக ஆசீர்வாதம் செய்வர். பித்ருக்கள் மனம் மகிழ்ந்தால் மக்கட்பேறு, செல்வம், ஆரோக்கியம், கல்வி, கீர்த்தி முதலிய சகல சம்பத்துக்களும் உண்டாகும். ஆதலால் தர்ப்பணம் கட்டாயம் செய்தே தீரவேண்டும்.

அன்னருபமாக சிராத்தத்தைச் செய்யமுடியாது எனக் கருதியே தில தர்ப்பணம் செய்யப்படுகிறது. ஆதலினால் சிராத்தத்துக்குரிய நியமங்கள் தர்ப்பணத்துக்கும் உண்டு.

க்ரஹண தர்ப்பணம் தவிர மற்றெல்லாத் தர்ப்பணங்களையும் மாத்யான்ஹிக காலத்தில்தான் செய்யவேண்டும். பித்ருக்களுக்காக ஏற்பட்ட குதபகாலத்தில்தான் (பகல் 12 மணிக்கு மேல்) சிராத்தம், தர்ப்பணம் செய்யவேண்டும். தற்காலத்தில் உத்தியோகம் உள்ளவரும் மற்றவரும் அக்காலத்தில் செய்வது சிரமமாயிருக்குமென்பதால் காலை 8.30 மணிக்கு மேலாவது செய்ய இடமளித்தனர்.

தர்ப்பணகாலத்தில் வயிறு காலியாக இருக்கவேண்டும். உபவாச நியமத்துடன் கொடுத்தால்தான் பித்ருக்களைச் சேரும். தேவர்களுக்கும் விசேஷமாக பித்ருக்களுக்கும் உணவளிக்கும்போது நம் வயிறு சுத்தமாகவே இருக்கவேண்டும் என தர்மசாஸ்திரம் கூறுகிறது.

கைநிறையப் பித்ரு தீர்தத்தால் தர்ப்பணம் செய்யவேண்டும். சிலர் ஒரு பஞ்சபாத்ர தீர்த்தத்திலேயே தர்ப்பணம், ப்ரம்ம யஜ்ஞம் செய்துவிடுவர். இது தவறாகும். பித்ருலோகத்தில் உள்ளவர்களுக்கு உடலில் ஜலாம்சம் அதிகம். ஆதலால் நாம் தர்ப்பணம் செய்யும்போது நிறைய ஜலம் விடவேண்டும்.

எள்ளும் தர்ப்பையும் ஏன்? யஜ்ஞவராஹ மூர்த்தியாகத் தோன்றிய மஹாவிஷ்ணுவின் மனத்திலிருந்து கறுப்பு எள்ளும் ப்ராணனிலிருந்து ஜலத்தின் சாரமான தர்ப்பையும் உண்டாயின. பகவான் விஷ்ணு அசுரர் குலத்திற்கு அந்தகன். அவர் பெயரைக் கூறினாலே அரக்கர் பயந்தோடுவர். ஆதலினால் சிராத்த காலத்தில் சிராத்த ஸம்ரக்ஷக விஷ்ணுவை வரிக்கிறோம். அவரிடம் உண்டான எள்ளையும் தர்ப்பையையும் உபயோகித்தால் அசுரர் கிட்ட வரமாட்டார். ஆதலால் சிராத்தப் பிராமணர் உட்காருமிடம் தர்ப்பணம் செய்யுமிடங்களிலெல்லாம் எள்ளைத் தூவுகிறோம். தர்ப்பை பவித்ரமானது என்று சுருதி கூறுகிறது. தர்ப்பை பகைவரை விரட்டக்கூடிய சரமாகும்(அம்பு) தர்ப்பை இல்லாத கர்மா இல்லை என்றே கூறலாம். தர்ப்பேஷு ஆசீன: தர்ப்பான் தாரயமாண: என்று கூறுவதால் ஆசனத்துக்கும் விரல்களில் இடுக்கிக்கொள்வதற்கும் தர்ப்பை பயன்படுகிறது. தர்ப்பை தாராளமாக் கிடைக்காத தோஷத்தினால் இதற்கெல்லாம் கட்டைத் தர்ப்பையைப் பயன்படுத்துகிறோம். கிடைத்தால் முழுத் தர்ப்பையே சிறந்தது. அணிந்திருந்த தர்ப்பைப் பவித்திரத்தைக் கீழே வைக்கக் கூடாது. கழற்றி வைக்க நேரும்போது வலது காதில் வைத்திருக்கவேண்டும்.

தேவர், பித்ருக்கள், மனுஷ்யர், ருத்ரர் ஆகியவர்கள் ஒவ்வொரு திசையைத் தமக்கென ஏற்படுத்திக் கொண்டனர். கிழக்கு தேவர்கட்கும் மேற்கு மனிதர்கட்கும் தெற்கு பித்ருக்களுக்கும் வடக்கு ருத்ரர்களுக்கும் என வேதம் கூறுகிறது. பித்ரு லோகத்துக்குத் தலைவனான யமதர்மராஜன் தென்திசையிலேயே இருக்கிறார். ஆதலால் பித்ருகர்மாக்கள் எல்லாவற்றையும் தெற்குமுகமாகவே செய்யவேண்டும். தர்ப்பணத்திற்கு தெற்கு நுனியாகத் தர்ப்பைகளைப் போட்டு அதன்மீது பித்ருக்களை ஆவாஹனம் செய்யவேண்டும். தர்ப்பணத்தையும் தெற்குமுகமாகவே செய்யவேண்டும்.

தேவகார்யங்களைக் கிழக்கு அல்லது வடக்க முகமாகவே செய்யவேண்டும். ஆசமனம், சங்கல்பம், ஆவாஹனம், ஆசனம், முதலியவைகளை வடக்கு அல்லது கிழக்குமுகமாகவே செய்யவேண்டும். நதி, தடாகம், கிணறு முதலிய வெளியிடங்களில் பூமி சுத்தமாக இருந்தால் அங்கு எள்ளைத் தெளித்து சுத்தம் செய்வதற்குரிய மந்திரங்களைக் கூறி ப்ரோக்ஷித்து அதன்மீது தர்ப்பையைப் போட்டு பித்ருக்களை ஆவாஹனம் செய்யவேண்டும். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஆவாஹனம் அவசியமில்லை. வீட்டில் செய்வதானால் தேவபூஜா ஸ்தானத்தைவிட்டு சுத்தமான ஓரிடத்தில் அமர்ந்து ஓர் அகலமான தாம்பாளத்தில் தர்ப்பையைப் போட்டு அதில் ஆவாஹன தர்ப்பணாதிகளைச் செய்யவேண்டும். வெள்ளித் தாம்பாளம் உகந்தது.

அமாவாசையும் ஸங்க்ரமணமும் சேர்ந்தால் இரண்டில் ஒன்றைச் செய்தால் போதும். ஆனால் சித்திரை, ஐப்பசி, உத்தராயணம்,

தக்ஷிணாயனம் இந்த நான்கிலும் ஸங்க்ரமண தர்ப்பணத்தையே செய்யவேண்டுமென்பது விசஷ விதி.

அர்த்தோதயம் அல்லது மஹோதயம், ஸங்க்ரமணம், அமாவாசை இவை ஒன்றுசேர்ந்தால் மிக அபூர்வமான அர்த்தோதயம் அல்லது மஹோதயத்தையே செய்யவேண்டும். ஒருவருக்குத் தந்தை இருந்து தாய் இறந்தால் தர்ச தர்ப்பணத்தை அவர் செய்யவேண்டியதில்லை. தாய் இருந்து தந்தை இறந்தால் தர்ச தர்ப்பணம் செய்யவேண்டும். தந்நை இறந்த ஆண்டில் தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை. ஆனால் ஆண்டு பூர்த்தியாவதற்குள் க்ரஹண தர்ப்பணம் வந்தால் அதனைச் செய்துவிட்டு அதுமுதல் அமாவாசைகளிலும் தர்ச தர்ப்பணம் செய்யவேண்டும்.

ஞாயிறு, செவ்வாய், ஸப்தமி, அஷ்டமி, சுக்லபக்ஷ திரயோதசி, ஜன்மநக்ஷத்திரம், இரவு, இரு ஸந்த்யை ஆகிய இக்காலங்களில் எள்ளுடன் அக்ஷதை சேர்த்தே தர்ப்பணம் செய்யவேண்டும்.

நாமனைவரும் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பிதிர்க்கடனை -வருடத்தில் ஒருநாள் வரும் சிராத்தத்தையும்(ப்ரத்யாப்திகம்) அமாவாசை தர்ப்பணங்களையுமாவது - சிரத்தையுடன் கடைப்பிடித்துவந்தால் நம்மைப் பார்த்து நம் பிள்ளைகளும் பிற்காலத்தில் நமக்குச் செய்வார்கள். நாம் இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கும்வரை நம் பிதா மாதாக்களுக்கு சிராத்த தர்ப்பணங்களைச் செய்தவரவேண்டும் என தர்மசாஸ்திரம் கூறுகிறது. நம் அந்தண சமூகம் தாமும் தம் கருமங்களைச் சிறப்பாகச் செய்து மற்றவர்களையும் செய்விக்கவேண்டும்.

## சூத்திரதாரி

**நாடகங்களின் தொடக்கத்தில் அதை இயக்குபவன் நாடகக்கதை, கதா பாத்திரங்கள் என்பவை பற்றி அறிவிப்பான். இவனைச் சூத்திரதாரன் எனக் கூறுவது வடமொழி நாடக மரபு. நாடகங்கள் தோன்றுவதற்குப் பல காலத்துக்குமுன் தோன்றிய அருங்கலை பாவைக் கூத்து. பாவைகளை நடிக்கச்செய்பவன் திரையின் உள்ளிருந்தவாறே வெளியே மேடையில் நிற்கும் பாவைகளை அவற்றுக்கும் தன் கைவிரல்களுக்குமிடையில் உள்ள நூல்களை அசைப்பதன்மூலம் இயக்குவான். இதனால் இவன் சூத்திரதாரன் என்று பெயர் பெற்றான். இவ்வாறே நாடக இயக்குநனும் இப்பெயரைப் பெற்றான். இக்காலத்தில் தம்மை வெளிப் படுத்தாமலிருந்துகொண்டு மற்றையோரை ஏவிக் காரியம் பார்க்கும் திறமையாளரைச் சூத்திரதாரி என்கிறோம். (சூத்திரம் - நூல்)**

~ இந்துநாகரிக பாட ஆசிரியர்கள்

~ இசை நடன ஆசிரியர்கள்

~ சித்த ஆயுர்வேத வைத்தியர்கள்

~ ஊடகவியலாளர்கள்

~ வரலாற்றாய்வாளர்கள்

~ சுதந்திர எழுத்தாளர்கள்

~ சோதிடர்கள்

**இவர்கள் அனைவரும்
தங்கள் பணிகளைத்
தவறின்றிச் செய்வதற்கு
வடமொழியில்
ஆரம்ப அறிவையாவது
பெற்றிருப்பது
இன்றியமையாதது.**

**ஏன் எனில்,**

*இவர்களின் துறைகளைச் சார்ந்த தமிழில் பெருந்தொகையான
வடசொற்கள் கலந்துள்ளன.
அவற்றுட் பல பிழையாகவும் வழங்குகின்றன.
அது மட்டுமல்ல.*

**இவர்களுக்குப் பெற்றோர் இட்ட பெயர்கள்
இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டிய பெயர்கள்
இவர்கள் தாமே தெரிந்தெடுத்த புனைபெயர்கள்
ஆகியவற்றில் எத்தனை எத்தனை பிழைகள்!**

**ஆகவே,**

வடமொழியில் புலமை பெறாவிட்டாலும்
ஆரம்ப அறிவையாவது பெற்றிருத்தல் அவசியமாகிறது.
இதற்கான இலகுவழி,
புத்தம்புதியமுறையில் ஆசிரியரில்லாமலே
இரண்டு வாரத்திலே வடமொழி எழுத்துக்களை-
கிரந்தம், தேவநாகரி ஆகிய இருவகை எழுத்துக்களையும் ,
சொற்களையும், வாக்கியங்களையும்
தமிழ்மூலமாகப் போதிக்கும் புதிய நூல்

# அக்ஷர போதினி

கைகொடுத்துதவக் காத்திருக்கிறது.

*இது ஒரு சர்வானந்தமய பீட வெளியீடு.*